இருப்பு தொடர்ந்து கூடுகின்றதென்று பொருள்" என்று கூறுகின்றார்.

கூலி குறைவதால், விலை வீழ்ச்சியால் மக்கள் கையிலிருக்கும் உண்மை பண மதிப்பு கூடுவதால் நுகர்வு கூட பொருளாதார முழுநிறை வேலைவாய்ப்பு நிலையை அடையும். இதனை பிகுவின் விளைவு என்கின்றோம். பிகு தனது கருத்தை $N = \frac{QY}{W}$ என்று கூறுகின்றார். இதில் N வேலைசெய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும், Y நாட்டின் வருவாயையும் Q நாட்டு வருவாயில் கூலியாகச் செலுத்தும் பணவீதத்தையும் W கூலி விகிதத்தையும் குறிக்கின்றன. மற்றவை மாறாதிருக்க கூலி குறைவதால் வேலை செய்பவர்களின் எண்ணிக்கை கூடுமென்பதை இந்தச் சமன்பாடு காட்டுகின்றது.

மதிப்பீடு: பொருளாதார அறிஞர்கள் பிகுவின் விளைவை அப்படியே ஏற்றுக்கொள்ளவில்லை. பிகுவே தன்னுடைய கருத்து நடைமுறைக்கு எவ்வளவு பொருந்துமென்ற ஐயப்பாட்டைக் கிளப்புகின்றார். எந்த அரசாலும் குறிப்பிடத்தக்க அளவு பணக் கூலியைக் குறைக்க முடியாதென்பதையும், குறைத்தால் தொழிலாளர்கள் நடந்துகொள்ளும் முறை பாதக விளைவை ஏற்படுத்துமென்பதையும் உணர்ந்தே இருந்தார். பொருட்களின் விலை குறையும்பொழுது கடன் கொடுத்தவர்களின் [Creditors] சொத்துக்களின் உண்மை மதிப்புக் கூடுவதால் அவர்களின் நுகர்வு கூடும். ஆனால் கடன் பட்டவர்களின் [Debtors] சுமை கூடுவதால் அவர்களின் நுகர்வு குறையும். கடன் கொடுத்தவர்களின் நுகர்வு கூடுவதை கடன்பட்டவர்களின் நுகர்வு குறைவது சமன்செய்வதால், நிகர விளைவு இல்லாமல்போகும். அதாவது சமுதாயத்தின் சராசரி நுகர்வு விருப்பம் மாறாமலிருக்கும்.

பிகு எத்தனை சதவீத விலை வீழ்ச்சி சமுதாயத்தில் மொத்தச் செலவைக் கூட்டுமென்று கூறவில்லை. அரசு மிகவும் விலையைக் குறைத்தால் 1930-இல் ஏற்பட்டதைப் போன்று பணமந்தம் ஏற்படலாம். ஆதலால், பிகுவின்

6. **வட்டிவீதம்:** வட்டிவீத மாறுதலால் ப
சேமிப்பும் முதலீடும் சமநிலைக்கு வருவதில்
சேமிப்பவர்கள் நோக்கம் வேறாகவும், முதலீட்
கள் நோக்கம் வேறாகவும் உள்ளது கீனஸ் வருவ
மூலமே சேமிப்பும் முதலீடும் சமநிலையடையுமெ
கருதுகின்றார்.

7. **அரசின் தலையீடு:** சே. கருதியதைப் போ
பொருளாதாரம் தன்னைத்தானே சரிசெய்துகொ
தாக இல்லை இதனால் அரசு தலையிடுவது தேவை
கின்றது கூலிகளும் விலைகளும் நெகிழ்ச்சியுடையத
இல்லை இதனால் அரசு தலையிட்டே முழுநி
வேலை நிலையை ஏற்படுத்த வேண்டியுள்ளது.

8. **நிறைவுபோட்டியின்மை:** சேயின் அங்காடி வி
நிறைவுபோட்டி நிலவுகின்றதென்று எடுகோளி
உருவனாது ஆனால் நடைமுறையில் எங்கும் நிறைவு
போட்டி இருப்பதில்லை.

9 **வேலைநிலையை விளக்காமை:** தொன்மை
கோட்பாடு' முழுநிறை வேலை நிலை இருக்குமென்
எடுகோளின் மூலம் எப்படி வேலைவாய்ப்பு நில
நிர்ணயிக்கப்படுமென்பதை விளக்கத்தவறிவிட்டது.

## III. பிகுவின் முழுநிலை வேலை நிலைக்கருத்து

கேம்பிரிட்ஜின் புகழ்பெற்ற பொருளியலறிஞரா
ஏ. சி பிகு [ArthurCecil Pigou] சேயின் அங்காடி விதிை
மேம்படுத்தி வழங்கிய முழுநிறை வேலை நிலை பற்றி
கருத்து குறிப்பிடத்தக்கது இதனை 'பிகுவின் விளை
[Pigou Effect] என்றும் 'உண்மை-இருப்புவிளைவு' [Re
Balance Effect] என்றும்கூறுவார்கள். பிகு, பொருட்களி
விலையட்டம் குறைவதன் தொடர்பாக கூலி குறைகின்
பொழுது, தொழிலாளர்களின் கையிருப்பு ரொக்க
பணத்தின் மதிப்புக் கூடுவதால் மொத்த விளைவுள்
வேலைகூடுமென்று கருதுகின்றார். இதனை அவ
“பணக் கூலி விகிதம் குறைந்துகொண்டே போ
வேண்டும். வேலைவாய்ப்பும் உண்மை வருவாயு
நிலைநிறுத்தப் பெறுகின்றபொழுது விலைகள் குறை
தும், குறைந்து கொண்டேயும் போகின்றதென்றா
உண்மையான வருவாய்க் கணக்கில் மதிப்பிடுகின்ற பண

ஒருபகுதியைச் சேமிக்கின்றனர். வருவாய் ஓட்டத்தில் ஒருபகுதியைச் சேமிப்பதால் மொத்தத் தேவையில் பற்றாக்குறை ஏற்பட்டு மிகை உற்பத்தி ஏற்படுகின்றது. ஆனால் தொன்மைப் பொருளியலறிஞர்கள் சேமிப்பை எல்லாம் முதலீடு செய்வார்களென்று எண்ணினர். திறனாய்வாளர்கள் வட்டியின் செல்வாக்கை ஒட்டியே முதலீடு அமைவதால் சேமிப்பெல்லாம் முதலீடாவ தில்லை என்று சுட்டிக்காட்டுகின்றனர்.

2. **வேலையின்மை:** வேலைவாய்ப்புநோக்கில்தற்காலிக மாகமட்டுமே வேலையின்மைச் சிக்கல் இருக்குமென்ற கருத்தை ஏற்க முடியாது எல்லா முதலாளித்துவ நாடு களிலும் வேலையின்மைச் சிக்கல் இருக்கின்றது கூலி யைக் குறைப்பதால்–நெகிழ்ச்சியால் மட்டும் முழுநிறை வேலைவாய்ப்பு ஏற்படுவதில்லை. மாறாக கூலியைக் குறைப்பதால் வருவாய் குறைய, தேவைகுறைய, உற்பத்தி குறைய மேலும் வேலையின்மை கூடலாம்.

3. **உலகப் பெருமந்தம்:** 1930 இல் ஏற்பட்ட உலகப் பெருமந்தம் சேயின் விதியை பொய்யாக்கிவிட்டது. சேயின் விதிப்படி நீண்ட பெருமந்தம் ஏற்பட முடியாது. ஆனால் உலகப்பெருமந்தம் ஏன் வாணிப ஏற்றத்தாழ்வு கள் ஏற்படுகின்றதென்பதை எண்ணிப்பார்க்க வேண்டிய தேவையை உருவாக்கியது

4. **பணத்தின் பணி:** சே, பணம் மாற்று மையமாக மட்டும்தான் செயல்படுகின்றதென்று கருதினார் அதனுடைய பிற பணிகளை, குறிப்பாக சேமிப்புக் களஞ்சியப் பணியை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வில்லை. இது இந்த விதியின் குறிப்பிடத்தக்க குறையாகும்.

5. **நுகர்வும் வருவாயும்:** தொன்மைப் பொருளிய லறிஞர்கள் வருவாய் கூடுமளவிற்கு நுகர்வும் கூடு மென்று கருதினர். கீன்ஸ் இக்கருத்தை சாடினார். கீன்ஸ் வருவாய் கூடுகின்ற அதே விகிதத்தில் நுகர்வு கூடா தென்பதைச் சுட்டிக்காட்டினார். ஏனென்றால் உயர் வருவாய் நிலையில் சேமிப்புக்கூடும். இதனால் விளைவுள்ள தேவையில் பற்றாக்குறையும், மந்தமும் தோன்றுகின்றது.

தொழிலில் தற்காலிகமாக மிகை உற்பத்தி இருந்தா
நீண்டகாலத்தில் இருக்காது. பொது மிகை உற்
ஏற்பட வழியில்லை.

4. **பொது வேலையின்மை இல்லை:** சுதந்திர
போட்டிப் பொருளாதாரத்தில் பொதுவேலையின்
தோன்றாது. கூலிகுறைகின்றபொழுது உழைப்பு
தேவை கூடும். வேலையின்மை மறையும்.

5. **தானே வருவாய் அளித்தல்:** வேலையற்றவர்க
யும் பயன்படுத்தாத சாதனங்களையும் உற்பத்தி
ஈடுபடுத்துதல் ஆதாயமாக இருக்கும் ஏனென்ற
அவை தங்களுக்குத்தாங்களே வருவாய் அளித்
கொள்ளும்.

6. **வட்டியின் நெகிழ்ச்சி:** வட்டி நெகிழ்வுடைய
இருப்பதால் சேமிப்பும் முதலீடும் சமமாக இருக்கும்.

7. **பணம் மாற்று மையமாக மட்டும்:** பணம் பண
மாற்றிலுள்ள சிக்கலைத் தீர்ப்பதாக மாற்று மையமா
மட்டும் பயன்படுவதாக இருக்கும். அது பொருள
தாரத்தின் வேறுவிளைவுகளை ஏற்படுத்தாது.

**திறனாய்வு:** ஜே. எஸ். மில், ஆல்பிரட் மார்ஷ
ஏ. சி. பிகு போன்றவர்கள் சேயின் விதியைப் பெரிது
ஆதரித்தனர். ஆனால் [illegible] சேயின்வி
அப்படியே [illegible] ஆதலால் அமெரிக்க
இங்கிலாந்து பொருளியலறிஞர்கள் குறைகூறத் தொட
னர். குறிப்பாக அமெரிக்காவின் ஜே. எம். கீ
வன்மையாகச் சாடினார். கீன்ஸ் இதனைக் குறை
கூறியதோடு நில்லாமல் புதிய வேலைவாய்ப்புக் கோ
பாட்டை உருவாக்கி சேயின் விதியைப் பின்னுக்கு
தள்ளிவிட்டார். சேயின்விதி பற்றிக் கூறப்பெறும் குறை
களைத் தொகுத்துக் கூறலாம்.

1. **அளிப்பு தேவையை உருவாக்காமை:** உற்பத்தி
நோக்கில் அளிப்பு அதனுடைய தேவையை உருவாக்கு
என்பதை ஏற்க முடியாது. சேயின் விதி மக்கள்
தங்களுடைய மொத்த வருவாயையும் செலவிடுவார்
ளென்ற எடுகோள்களின் மீது உருவாக்கப்பெற்றுள்ளது
ஆனால் மக்கள் எல்லா வருவாயையும் செலவிடாம

7. பண ஓட்டம் தொடர்ச்சியாக இருக்கும். சேமிப்பு என்பது மூலதனப் பொருட்களின் முதலீடாக இருக்கும். அதாவது பணத்தை பெட்டியில் பூட்டி வைப்பது இருக்காது.

8. அங்காடி விரிவடையக் கூடியதாக இருக்கும். மாற்றுக்கு பொருட்கள் அளிக்கப்படுவதை ஒட்டி அங்காடி விரிவடையும்.

9. விரிவடையும் பொருளாதாரத்தில்புதிய நிறுவனங்களும் தொழிலாளர்களும் மற்றவர்களின் உதவியின்றி தங்களது பொருட்களை அளிப்பதன் மூலமே உற்பத்தி முறையில் தங்களை நிலைப்படுத்திக் கொள்வார்கள்.

10. பொருளாதாரம் நீண்டகாலச் சமநிலையில் இருக்கும். **அங்காடி விதியின் உள்ளடக்கக் கருத்துக்கள்:** சேயின் அங்காடி விதியில் கீழ்க்கண்ட கருத்துக்கள் உள்ளடங்கியுள்ளன.

1. **தானே இயங்கும் பொருளாதாரம்:** சேயின் அங்காடி விதி, பொருளாதார அமைப்பு எந்தக் கட்டுப்படுத்தும் அதிகார சக்தியுமின்றி தானே செயல்படுவதாகவும், தனக்குத்தானே ஏற்றத்தாழ்வைச் சரிபடுத்திக் கொள்வதாகவும் இருக்குமென்று கூறுகின்றது. எடுத்துக்காட்டாக, வேலையின்மை இருந்தால், கூலிகள் குறைவதன் மூலம் அனைவருக்கும் வேலை கிடைக்கும் நிலை ஏற்படுமென்ற கருத்தைக் கூறலாம்.

2. **அரசு தலையிடாமை:** சேயின் விதிப்படி அரசு பொருளாதார நடவடிக்கைகளில் தலையிடாதகொள்கையைப் பின்பற்ற வேண்டும். அரசு தலையிட்டால் தானே இயங்கும் பொருளாதாரத்தின் சமநிலை சீர்குலையும். அரசு தலையிடா நிலையில் ஏற்படுகின்ற ஏற்றத்தாழ்வுகள் அங்காடி சக்திகள் செயல்படுவதால் நீங்கிவிடும். விலை கூலி, வட்டி ஆகியவற்றில் நெகிழ்ச்சித் தன்மை இருக்க வேண்டும். தொழிலாளர் சங்கங்களும் தலையிடக் கூடாது.

3. **மிகை உற்பத்தியின்மை:** இவ்விதிப்படி பொருளாதாரத்தில் மிகை உற்பத்தி [Over-Production] இருக்காது. உற்பத்தி மிகுதியாகின்றபொழுது விலைகள் குறைந்து தேவை கூடமிகை உற்பத்தி தீர்ந்துவிடும். த

எண்ணினர். தற்காலிகமாக ஏதாவது ஒரு பொருளின் உற்பத்தி மிகுதியாகலாம். மற்றொன்றின் உற்பத்தி குறை லாம் இதனால் குறுகிய கால வேலையின்மை தோன்றலா ஆனால் அது விரைவிலேயே மாறி முழுநிறை வேலை வாய்ப்பு நிலையை அடையும்.

பண அளவுக் கோட்பாட்டின்படி விலைமட்ட என்பது பண அளிப்பின் பணியாக இருக்கும். ப அளவின் மாற்ற விகிதத்தில் விலைமாறும் இத $MV = PT$ என்ற சமன்பாடு காட்டுகின்றது. இதன்படி பண மாற்று மையமாக மட்டுமே பணியாற்றுகின்றது. இத படி மொத்தத்தேவை மொத்த அளிப்புக்குச் சமமா இருக்கும்.

**எடுகோள்கள்:** சேயின்விதியைக் கீழ்க்கண்ட கோள்களின் அடிப்படையில் உருவாக்கியுள்ளார்.

1. உற்பத்தியாளர்கள் தங்களுக்குத் தாங்க வேலை கொடுத்துக் கொள்ளும் சமுதாயமாக இருக்கு அதாவது உற்பத்தியாளர்கள் தங்களுடைய பொரு களை விற்றே வருவாய் பெறுவார்கள்.

2. தங்களுடைய வருவாய் முழுவதையும் நு பொருட்களுக்கோ, உற்பத்தியாளர் பொருட்களுக்கே செலவிட்டுவிடுவார்கள்.

3. சுதந்திரமாக மாற்றுப் பொருளாதாரம் இருக்கு வாங்குபவர்கள் விருப்பம்போல வாங்குவார்கள், வி பவர்களும் சுதந்திரமாக விற்பனை செய்வார்கள் நிறைவுப்போட்டி நிலவும், உற்பத்தியிலோ, மாற்றிலோ விலையிலோ கட்டுப்பாடு இருக்காது

4. சேமிப்பும், முதலீடும் வேறுபட்ட பணிகளா இருக்காது சேமிப்புப், முதலீடும் சமமாக இருக்கு நெகிழ்ச்சியுள்ள வட்டி விதம் சேமிப்பையும், முதலீட்டை யும் சமநிலைக்கு கொண்டு வரும்.

5. அரசு தலையிடாக் கொள்கையைப் பின்பற்று அங்காடிச் சக்திகள் செயல்படுவதில் தலையிடாது.

6. அங்காடியின் அளவு உற்பத்தியின் அளவ படியே அமையும் அப்பொழுது தான் அளி தேவைக்குச் சமமாக இருக்கும்.

விதியையும், பண அளிப்பு கோட்பாட்டையும் சார்ந்திருப்பதால் அவற்றை இங்கு விளக்கலாம்.

**அங்காடி விதி விளக்கம்:** பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிரெஞ்சுப் பொருளியலறிஞரான ஜே. பி. சே [Jean Baptist Say 1667-1832] "அளிப்பு அதனுடைய சொந்த தேவையை உருவாக்கும்" [Supplycreates its owndemand] என்று கூறிய அங்காடி விதி ஒரு காலத்தில் மிகப் புகழ் பெற்றிருந்தது. இக்கருத்துப்படி உற்பத்தியே பொருளுக்கு அங்காடியை உருவாக்கிவிடும்.

சேயின் அங்காடி விதிப்படி, சுதந்திரப் பொருளாதாரத்தில் உற்பத்திக்காரணிகளின் மொத்த வருவாய் பொருள்களுக்கும் பணிகளுக்கும் தேவையை ஏற்படுத்தும். அதாவது பொது அளிப்பும் பொதுத் தேவையும் சமமாக இருக்கும். இதனைக் கீழ்க்கண்டவாறு விளக்கலாம்.

| | |
|---|---|
| பொருட்களின் உற்பத்தி ஒரு கோடி ரூபாய் | கூலி, வட்டி, வாரம் ஆதாயமாக வருவாய் ஒரு கோடி ரூபாய் |
| பொருட்களின் அளிப்பு ஒரு கோடி ரூபாய் | பொருட்களுக்கான தேவை ஒரு கோடி ரூபாய் |

ஒரு கோடி ரூபாய் பொருள் உற்பத்தியாகின்ற பொழுது இரண்டு விளைவுகள் ஏற்படுகின்றன. ஒருபக்கம் ஒருகோடி ரூபாய் உற்பத்திக்காரணிகளுக்கு வருவாயாகச் சென்று, ஒரு கோடி ரூபாய் பொருட்களுக்கான தேவையாக உருவெடுக்கின்றது. மறுபக்கம் ஒரு கோடி ரூபாய் பொருட்கள் [அளிப்பு] அங்காடிக்கு வருகின்றன. அளிப்பும், தேவையும் சமமாகின்றது. அளிப்பு கூடுகின்றபொழுது உற்பத்திக் காரணிகளின் வருவாயும் கூடும். உற்பத்திக் காரணிகளின் வருவாய் கூடுகின்ற அளவுக்கு பொருட்களின் பணிகளின் தேவையும் கூடும். இதனை $\Delta O = \Delta Y \Delta E$ [$\Delta O$ கூடுகின்ற உற்பத்தி; $\Delta Y$ = கூடுகின்ற வருவாய்; $\Delta E$ கூடுகின்ற செலவு] என்றும் கூறலாம்.

அளிப்பு தனக்குத்தானே தேவையை உருவாக்கிக் கொள்ளுமென்று கருதியதால் நீண்டகால பொருளா [illegible]

1] **உழைப்பு அங்காடி** [Labour Market]: தொழிலாளர் தேவை அளிப்பை ஒட்டி உழைப்பு அங்காடி இருக்கும். அதன்படி நிலவும் கூலிவிகிதத்தில் உழைப்பின் தேவையும் அளிப்பும் சமமாக இருக்கும். 2] உற்பத்தி அங்காடி [Product Market]: சேமிப்பும் முதலீடும் உற்பத்தி அங்காடியில் சமமாக இருக்கும். அதாவது, முந்திய சேமிப்பும் முந்திய முதலீடும் சமமாக இருக்குமென கருதினர். 3] **பண அங்காடி** [Money Market]: பணத் தேவையோடு தொடர்புடையது பண அங்காடியாகும். முதலிரண்டும் உண்மையான பொருளாதாரம் தொடர்பானது அவர்கள்பணம், வாங்கல்—விற்றல், கொடுக்கல் வாங்கல் ஆகிய பணிகளைமட்டும் செய்வதாக கருதியதால் அதற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கவில்லை. பண அங்காடி மற்றைய அங்காடியிலிருந்து விலகியிருப்பதாகவும் கருதினர்.

தொன்மை பொருளியலறிஞர்கள் விலைகளிலும் கூலிகளிலும் இருக்கும் நெகிழ்ச்சியின் காரணமாக முழுநிறை வேலை நிலை ஏற்படுமென்றுநம்பினர். அதாவது மிகை உற்பத்தி காரணமாக, மந்தநிலை உருவாகி வேலையின்மை தோன்றினால் விலைகள் குறையும். இதனால் தேவை கூடும். தேவை விலையைத்தூண்டி பொருளாதார நடவடிக்கைகள் பெருக வேலையின்மை மறையும் இதேபோல வேலையின்மையைக் கூலியைக் குறைப்பதன் மூலம் போக்கலாமென்று எண்ணினர். கூலியைக்குறைத்தால் உழைப்பிற்குரிய தேவைகூடி பொருளாதார நடவடிக்கைகள் அதிகமாகும். இதனால் வேலையின்மை மறையும்.

டி ஆர். மால்தஸ், சிஸ்மாண்டி [Sismondi], கார்ல் மார்க்ஸ் ஹாப்சன், சில்வியோகேசல் [Silvio-Gesell] போன்றவர்கள் தொன்மைப் பொருளியலறிஞர்களின் கருத்தைச் சிலவேலைகளில் சாடிய போதிலும் அவர்களால் அதனை முழுவதும் மறுக்க இயலவில்லை. கீன்ஸ்தான் பழைய கருத்தை மறுத்ததோடு புதிய வேலைவாய்ப்புக் கோட்பாட்டையும் உருவாக்கியளித்தார்.

## II. சேயின் அங்காடி விதி

### [Say's Law of Market]

தொன்மைப் பொருளியலறிஞர்களின் முழுநிறை வேலைவாய்ப்புக் கோட்பாடு சேயின் அங்காடி

'இ' பகுதி மூன்று பக்க அளவில் விடை தருக.

5. பலவகையான வேலையின்மைகளை விளக்குக.

# 4. தொன்மைப் பொருளியலறிஞர்களின் வேலை வாய்ப்புக் கோட்பாடு

## I. தொன்மைப் பொருளியலறிஞர்களின் கருத்து விளக்கம்

'தொன்மைப் பொருளியலறிஞர்கள்' [Classical Economists] என்னும் சொற்றொடரை, ரிக்கார்டோவையும் ஆடம்ஸ்மித் உட்பட அவரது முன்னோடிகளையும் குறிக்க கார்ல்மார்க்ஸ் பயன்படுத்தினார். ஆனால் கீன்ஸ் தொன்மைப் பொருளியலறிஞர்கள் என்ற சொற்றொடரை ஜேம்ஸ் ஸ்டுவர்ட், மில், ஆல்பிரட் மார்ஷல், ஏ. சி. பிகு உட்பட ரிக்கார்டோவை பின்பற்றிய பொருளியலறிஞர்களை எல்லாம் குறிக்கின்ற வகையில் பயன்படுத்தினார் பொதுவாக 1776ல் ஆடம்ஸ்மித்தின 'நாடுகளின்செல்வம்' [Wealth of Nations] நூல் வெளி வந்ததிலிருந்து ஏறத்தாழ 50 ஆண்டுகளில் டேவிட் ரிக்கார்டோ, ஜே எஸ் மில், மார்ஷல், ஜீன்பேட்டிஸ்ட்சே ஆகியோர் உருவாக்கிய கோட்பாட்டை தொன்மைப் பொருளியல் கோட்பாடு என்கின்றோம்.

தொன்மைப் பொருளியலறிஞர்கள், உழைப்பு, மூல வளங்களும் எப்பொழுதும் முழுநிறை வேலை நிலையில் இருக்குமென்று கருதினர். அவர்கள், உற்பத்திசெய்த பொருட்கள் அவைகளே தேவையை உருவாக்கிக் கொள்வதால் மொத்த அளிப்பும் மொத்த தேவையும் சமமாக இருக்குமென்று கருதியதால், முழுநிறைவேலைநிலை இருக்குமென்று அவர்கள் கருத்துப்படி, குறுகியகாலத்தில் வேண்டுமானால் வேலையின்மை இருக்கலாம். தற்காலிகமாக இருக்கும் வேலையின்மை பிறழ்ச்சி காரணமாகவோ, தன் விருப்பமானதாகவோ இருக்கும்.

தொன்மைப்பொருளியலறிஞர்கள் நிறைவப்போட்டி இருக்குமென்ற எடுகோளின் அடிப்படையில் கீழ்க்கண்ட மூன்றுவகையான அங்காடிகள் இருக்குமென்று கருதினர்.

வேண்டும் நுகர்வோர் இருவருக்கும் மாற்று விகிதம் சமமாக இருக்க வேண்டும்.
பொருட்களுக்கான மாற்று விகிதம் சமமாக இருக்க அமைகின்றது

இதற்கான சமன்பாடு பின்வருமாறு அமைகின்றது

$MRPT^1 ab = MRPT^2 ab$

MRPT = பொருட்களின் இறுதிநிலை மாற்றுவிகிதம் பொருட்களுக்கிடையே உள்ள இறுதிநிலை மாற்று விகிதம் எல்லா நுகர்வோருக்கும் சமமாக இருக்க வேண்டும்.

## ஆறாம் நிபந்தனை (Sixth condition)

வேலையிலிருந்து கிடைக்கும் வருவாய் ஓய்வு நேர ஆகியவைகளின் இறுதிநிலைப் பதிலீட்டு விகிதம் எல்லா உழைப்பாளர்களுக்கும் சமமாக இருக்க வேண்டும்

## ஏழாம் நிபந்தனை (Seventh Condition)

குறிப்பிட்ட நேரத்தில் இரு வகைகளில் முதலீடு செய்யப்படுகின்ற சொத்துகளுக்கு இடையே உள்ள இறுதிநிலைப் பதிலீட்டு விகிதம் சமமாக இருக்க வேண்டும். மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித்திறனுக்கு அளிக்கப்படும் வட்டி சமமாக இருக்க வேண்டும்

மேற்கூறிய ஏழு நிபந்தனைகளும் பாரிட்டோவின் உத்தம நிலையை அடைவதற்கு இன்றியமையாத நிபந்தனைகள் ஆகும்.

## 3.2 வெளி விளைவு EXTERNALITY

சுற்றுச்சூழல் பொருளியலின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றாக வெளிவிளைவுகள் அமைகின்றன. இது நலப் பொருளியலிருந்து பெறப்பட்ட கருத்தாகும். பாரிட்டோவின் உத்தம நிலையைப் பொருளாதாரத்தில் நிலைநாட்டுவதன் மூலம் சுற்றுச்சூழல் சிக்கலை அகற்றலாம். சுற்றுச்சூழல் தரத்தினை உயர்த்துவதன் மூலம் உற்பத்திச் செலவினைக் குறைக்கலாம். வெளி விளைவுகள் தனி நபர் நடவடிக்கையால் அதிகம் ஏற்படுகின்றன. தனி நபரின் உற்பத்தி மற்றும் நுகர்வு நடவடிக்கைகளாலும் நிறுவனத்தின் உற்பத்தி நடவடிக்கைகளாலும் சுற்றுச்சூழல் மாசுபாடு ஏற்படுகின்றது

கொள்கைகளுக்கு ஏற்ப கணக்கினை அதிலிருந்து தெரிவு செய்து கொள்வார்கள். அவை

1. முறையான கணக்கு (Regular Account)

ஒரு முதலீட்டாளர் எந்த நேரத்திலும் எத்தனை பங்குகளை வேண்டுமானாலும் வாங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார். தான் பங்கு வாங்கிய திட்டத்திற்கேற்ப மாதம், காலாண்டு, அல்லது அரையாண்டில் பங்கு ஆதாயத்தை கூடுதல் யூனிட்டுகளை வாங்க முதலீட்டாளர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

2. குவிந்தல் கணக்கு (Accumulation Account)

ஒரு குறைந்த பட்ச ஆரம்ப முதலீட்டுக் கணக்கினைத் தொடங்கி, தொடர்ந்து அந்த நிதியில் சேர்க்கும் உரிமை உள்ள திட்டம் குவிந்தல் கணக்கு எனப்படுகிறது. இந்த குவிந்தல் கணக்கு தன்விருப்பமாகவோ, ஒப்பந்த அடிப்படையிலோ இருக்கலாம். தன் விருப்ப குவிந்தல் திட்டத்தில் முதலீட்டாளர் தனது விருப்பப்படி குறிப்பிட்ட காலங்களில் முதலீடு செய்யும் நெகிழ்வுத் தன்மையை பெறுகிறார். ஆனால் ஒப்பந்த குவிப்புத்திட்டத்தில் முறையான இடைவெளியில் முதலீட்டாளர் கட்டாயமாக முதலீடு செய்தல் வேண்டும்.

3. திரும்ப எடுக்கும் கணக்கு (Withdrawal Account)

இத்திட்டத்தின் கீழ் ஒரு முதலீட்டாளர் முறையாக நிதியைத் திரும்ப எடுக்கும் உரிமையைப் பெறுகிறார். இது வயது முதிர்ந்தவர்களுக்கு ஓய்வூதிய ஆதாயம் பெறுவதில் உதவியாக உள்ளது.

SEBIயும் பரஸ்பர நிதிகளும். (SEBI and Mutual Funds)

இந்திய அரசாங்கம் பத்திர அங்காடியில் பரஸ்பர நிதிகளை

## 1. பங்கு ஆதாயம் (Dividends)

பரஸ்பர நிதி நிறுவனங்கள் தமது முதலீட்டின் மூலம் பெறும் பங்கு ஆதாயத்தை யூனிட்தாரர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கிறது. முதலீட்டாளர்களுக்கு இந்த பங்கு ஆதாயத்தில் யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியாவின் யூனிட்டுகளுக்கு ரூ.15,000 வரை விலக்களிக்கப்படுகிறது.

## 2. மூலதன ஆதாயம் (Capital Gains)

கிடைக்கப்பெற்ற மூலதன ஆதாயத்தில் தங்கள் பங்கினை பணமாகவோ, பொருளாகவோ பெற்றுக் கொள்ளும் உரிமையும் பரஸ்பர நிதியின் யூனிட்தாரர்களுக்கு வழங்கப்படுகிறது.

## 3. நிகர சொத்து மதிப்பு அதிகரித்தல் அல்லது குறைதல் (Increase or Decrease in NAV)

பரஸ்பர நிதிகள் வைத்திருக்கும் சொத்து அமைப்பில் ஏற்படும் இலாப நஷ்டங்கள் காரணமாக நிகர சொத்து மதிப்பு அதிகரிக்கவோ குறையவோ வாய்ப்பு ஏற்படுகிறது. பரஸ்பர நிதிகள் மிக அதிக அளவு வருவாய் ஈட்ட இயலாதவையாக இருந்த போதிலும், அவ்வாறு மாற்றங்களால் ஏற்படும் இடர்ப்பாட்டினைக் குறைக்க அவைகளால் முடியும். பல பரஸ்பர நிதிகள் நீண்டகாலத்தில் ஈட்டும் சராசரி விளைவு விகிதம் வங்கியின் கால வைப்பில் கிடைக்கும் வருவாயை விட அதிகமாக இருக்கும்.

## பரஸ்பர நிதி வைத்திருப்போரின் கணக்கு (Mutual Fund Holder's Account)

பெரும்பாலான பரஸ்பர நிதிகள் மூன்று வகையான கணக்குகளை வழங்குகின்றன. முதலீட்டாளர்கள் தங்கள்

2. இந்தவகை நிதிகளின் பங்குகள் நிகர சொத்து மதிப்பின் அடிப்படையில் மீட்கப்படுவதில்லை. ஆனால் நிலையான பங்குச் சந்தையின் இரண்டாம் நிலை அங்காடியில் விற்பனை செய்யப்படும் போது அவற்றின் அங்காடி விலை நிகர சொத்துமதிப்பை விட அதிகமாகவோ, குறைவாகவோ இருக்கலாம்.

3. மூடப்பட்ட முடிவு நிதிகளின் நோக்கங்கள் திறந்த முடிவு நிதிகளின் நோக்கங்களிலிருந்து வேறுபட்டிருக்கும்.

4. மூடப்பட்ட முடிவு நிதிகள், பெருநிறுவனங்களின் பத்திரங்களை வாங்கும் வகையில் இரண்டாம் நிலை அங்காடியில் செலுத்தப்படும்.

5. மூடப்பட்ட முடிவு நிதிகளின் விலைகள் தேவை அளிப்பு ஆகிய காரணிகளால் நிர்ணயிக்கப்படும்.

## திறந்த முடிவு நிதிகள் (Open End Funds)

திறந்த முடிவு நிதிகள் தொடர்ந்து விற்பனை செய்யப்படுதல், பங்குகளை மீட்டல் ஆகிய இயல்புகளைப் பெற்றிருக்கும். அதாவது இந்த நிதியில் நிலையான முதிர்வுகாலம் கிடையாது. எப்போதெல்லாம் இயலுமோ அப்போதெல்லாம் தனது பங்குகளை விற்பனை செய்யும். இந்த பங்குகளின் விலை நிகர சொத்து மதிப்பின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும். அதே போல் அவற்றை நிகர சொத்து மதிப்பு விலையில் முதலீட்டாளரிடமிருந்து மீண்டும் வாங்கிக் கொள்ளவும் எப்பொழுதும் தயாராக இருக்கும்.

## பரஸ்பர நிதியிலிருந்து கிடைக்கும் வருவாய் (Return from Mutual Funds)

பரஸ்பர நிதியில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்கள் பங்கு ஆதாயம், மூலதன ஆதாயம், நிகர சொத்து மதிப்பு உயர்வு ஆகியவை மூலம் வருவாய் பெறுகிறார்கள்.

முதலீடுகளைத் தருகின்றன. பொதுவாகக் கூறினால் வளர்ச்சி நிதியைவிட குறைந்த ஆபத்தும், வருமான நிதியைவிட அதிக ஆதாயமும், வருமானம் வளர்ச்சி நிதியின் இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையிலும் இருக்கும்.

## பரஸ்பர நிதியின் ஆதாயங்கள் (Benefits of Mutual Funds)

1. வரிச்சலுகைகளைப் பெறுவது இந்தியாவில் பரஸ்பர நிதிகளுக்கு கிடைக்கும் மிகப் பெரிய ஆதாயமாகும்.

SEBI யின் அங்கீகாரம் பெற்ற ஒரு பொதுத்துறை வங்கியோ, நிதிநிறுவனமோ பரஸ்பர நிதியை ஏற்படுத்தினால் அது இந்திய வருமானவரிச் சட்டம் பிரிவு 10 (23D) யின் கீழ் வரி விலக்கு பெறுகிறது. இச்சலுகையைப் பெற அந்த நிறுவனம் தனது இலாபத்தில் 90 சதவீதத்தை பகிர்ந்தளித்து விட வேண்டும். பரஸ்பர நிதிகள் மேலும் பல உட்பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன. அவை தேர்வை நிதிகள், வளர்ச்சி நிதிகள், வருமான நிதிகள், பணச் சந்தை நிதிகள், வெளிநிதிகள் என்பனவாகும். இந்த திட்டங்கள் இரண்டாம் நிலை அங்காடியில் விற்பனை/வாங்குதல் செய்வதற்காக பங்குச் சந்தையில் பட்டியலிடப்படுகின்றன.

## மூடப்பட்ட முடிவு நிதிகள் (Closed-End Funds)

மூடப்பட்ட முடிவு பரஸ்பர நிதிகள் கீழ்க்கண்ட சிறப்பியல்புகளைப் பெற்றிருக்கின்றன.

1. மூடப்பட்ட முடிவு நிதி முதலீட்டு நிறுவனங்கள், ஆரம்பத்தில் வழங்கியதன் பின்னர் பங்கு அலகுகளை விற்பனை செய்ய முடியாது. பங்குகளின் எண்ணிக்கையானது இதன் வளர்ச்சி வரம்பிற்குட்பட்டதாகும். மற்ற நிறுவனங்களின் புதிய வெளியீடுகளைப் போன்றே இந்த பங்குகள் வெளியிடப்படும். அவை பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டு விற்பனைக்கு வரும்.

1987 – 88 முதல் 1994 – 95 வரையிலான ஆறாண்டு காலத்தில் பரஸ்பர நிதிகள் 40 சதவீத ஆண்டு வளர்ச்சி விகிதத்தினைப் பதிவு செய்துள்ளன. ஆனால் 1995 – 96 மற்றும் 1996 – 97 ஆகிய இரண்டு வருடங்களில் பல காரணங்களால் பரஸ்பர நிதிகளின் செயல்பாடுகளில் பின்னடைவு காணப்பட்டது. இதனால் யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா தவிர மற்ற பரஸ்பர நிதிகள் திரட்டிய நிதியின் அளவு மிகக் குறைவாக இருந்தது. யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியாவைப் பொறுத்தவரை பெருமளவு மீண்டும் வாங்குதல் நடைபெற்றது.

யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா உட்பட அனைத்து பரஸ்பரநிதிகளின் மொத்த சொத்துக்களின் மதிப்பு 1997 மார்ச் மாதக் கணக்கீட்டின் படி ரூ. 70,000 கோடியாகும். இது 200 வகையான திட்டங்களில் பரவி இருந்தது.

## பரஸ்பர நிதிகளின் நோக்கங்கள்
(Objectives of Mutual Funds)

பரஸ்பர நிதிகள் சில குறிப்பிட்ட முதலீட்டு நோக்கங்களைப் பெற்றிருக்கின்றன. இந்த நோக்கங்கள் அதன் தகவல் தொகுப்பில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இவற்றின் முக்கிய நோக்கங்கள் வளர்ச்சி, வளர்ச்சி வருவாய், சரிசம வருவாய், தொழில் சார்ந்த நிதிகள் ஆகியவை ஆகும். வளர்ச்சி நிதிகள் அதிக முதலின ஆதாய நோக்கம் கொண்டவை. ஆனால் வளர்ச்சி வருவாய் நிதிகள் பங்கு ஆதாய வருவாய் மற்றும் முதலின ஆதாய நோக்கம் இரண்டையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. சரிசம நிதி பல வகையான சொத்துக்களில் முதலீடு செய்யப்பட்டிருக்கும். இதன் நோக்கம் முதலின ஆதாயம், பங்கு ஆதாயம், வட்டிவருவாய் ஆகியவற்றைப் பெறுவதோடு முதலைப் பாதுகாக்கும் நோக்கத்தையும் பெற்றிருக்கும். வருவாய் நிதிகள் அதிக வட்டி மற்றும் அதிக பங்கு ஆதாயம் ஈட்டும் பத்திரங்களில் அதிக கவனம் செலுத்துகின்றன. தொழில் சார்ந்த நிதிகள் தெரிவு செய்யப்பட்ட தொழில்களுக்கு – பெட்ரோலியத் தொழில் போன்றவை – இரசாயனத் தொழில்

நிச்சயமா. எனவே இந்தவகை முதலீட்டாளர்களின் நிதி தேவையைப் பூர்த்தி செய்வதில்லை.

அ. பழமை விரும்பும் முதலீட்டாளர்களை ஊக்குவிக்காது

இந்தவகை வைப்புகள் எவ்வித பாதுகாப்பும் அற்றவையாக இருப்பதால், தமது முதலீட்டிற்குப் பாதுகாப்பினை விரும்பும் முதலீட்டாளர்களும் இந்த வைப்புகளை விரும்பமாட்டார்கள்.

## பரஸ்பர நிதிகள் (Mutual Funds)

தங்களுக்குள் பரஸ்பர ஆதாயத்தைப் பெறும் நோக்குடன் தொழில் நிறுவனங்களின் நிதிசார் கருவிகள் அல்லது சொத்துக்களில் முதலீடு செய்ய விரும்பும் பொது உறுப்பினர்கள் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு அமைப்பே பரஸ்பரநிதி எனப்படும். இந்த நிதி அதன் உறுப்பினர்களிடமிருந்து அவர்கள் சேமிப்பைத் திரட்டி பலவகையான நிதிசார் சொத்துக்களில் முதலீடு செய்கிறது. இவ்வாறு செய்வதன் மூலம் முதலீட்டாளர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடு குறைக்கப்படுவதோடு, முதலீட்டிலிருந்து உச்சநிலை வருவாய் கிடைக்கிறது. அத்துடன் அவர்களது சொத்தின் மதிப்பும் பல மடங்கு அதிகரிக்கிறது. இவ்வாறு கிடைக்கும் ஆதாயம் முழுவதும் அனைத்து உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுகிறது. இவ்வாறு பரஸ்பர நிதி என்பது அதன் சந்தாதாரர்களின் பரஸ்பர உதவியை வலியுறுத்துவதோடு, முதலீட்டில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்கள் மூலம் அந்த நிதி நிர்வாகம் செய்யப்படுகிறது. இந்த நிதிகள் இந்திய அறக்கட்டளைச் சட்டத்தின் (Indian Trust Act) கீழ் நிறுவப்படுகின்றன. யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா அதற்கென தனிச்சட்டம் இயற்றி செயல்பட்டு வருகிறது. பிற நிதிகளில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களை SEBI பாதுகாக்கிறது. இந்த பரஸ்பர நிதியங்கள் SEBI (பரஸ்பர நிதி) நெறிமுறைகள் 1993 ஆம் கட்டுப்படுத்தப்படுகின்றன.

என்றும் 'உண்மை இருப்பு விளைவு' (Real Balance Effect) என்றும் கூறுவார்கள். பிகு, பொருட்களின் விலை மட்டம் குறைவதன் தொடர்பாக கூலி குறைகின்றபொழுது, தொழிலாளர்களின் கையிருப்பு ரொக்கப் பணத்தின் மதிப்புக் கூடுவதால் மொத்த விளைவுள்ள தேவை கூடுமென்று கருதுகின்றார். இதனை அவர் "பணக் கூலி விகிதம் குறைந்துகொண்டே போக வேண்டும். வேலை வாய்ப்பும் உண்மை வருவாயும் நிலை நிறுத்தப் பெறுகின்றபொழுது விலைகள் குறைந்தும், குறைந்து கொண்டேயும் போகின்றதென்றால், உண்மையான வருவாய்க் கணக்கில் மதிப்பிடுகின்ற பண இருப்பு தொடர்ந்து கூடுகின்றதென்று பொருள்," என்று கூறுகின்றார்.

கூலி குறைவதால், விலை வீழ்ச்சியால் மக்கள் கையிலிருக்கும் உண்மை பண மதிப்பு கூடுவதால் நுகர்வு கூட பொருளாதார முழுநிறை வேலைவாய்ப்பு நிலையை அடையும். இதனை பிகுவின் விளைவு என்கின்றோம். பிகு தனது கருத்தை $N = \frac{QY}{W}$ என்று கூறுகின்றார். இதில் N வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கையையும் Y நாட்டின் வருவாயையும், Q நாட்டு வருவாயில் கூலியாகச் செலுத்தும் பண வீதத்தையும், W கூலி விகிதத்தையும் குறிக்கின்றன. மற்றவை மாறாமலிருக்க கூலி குறைவதால் வேலை செய்பவர்களின் எண்ணிக்கை கூடுமென்பதை இந்தச் சமன்பாடு காட்டுகின்றது.

**மதிப்பீடு** பொருளாதார அறிஞர்கள் பிகுவின் விளைவை அப்படியே ஏற்றுக்கொள்ளவில்லை பிகுவே தன்னுடைய கருத்து நடைமுறைக்கு எவ்வளவு பொருந்துமென்ற ஐயப்பாட்டைக் கிளப்புகின்றார். எந்த அரசாலும் குறிப்பிடத்தக்க அளவு பணக் கூலியைக் குறைக்க முடியாதென்பதையும், குறைந்தால் தொழிலாளர்கள் நடந்து கொள்ளும் முறை பாதக விளைவை ஏற்படுத்துமென்பதையும் உணர்ந்தே இருந்தார். பொருட்களின் விலை குறையும் பொழுது கடன் கொடுத்தவர்களின் (Creditors) சொத்துக்களின் உண்மை மதிப்புக் கூடுவதால் அவர்களின் நுகர்வு கூடும். ஆனால் கடன்பட்டவர்களின் (Debtors) சுமை கூடுவதால் அவர்களின் நுகர்வு குறையும். கடன் கொடுத்தவர்களின் நுகர்வு கூடுவதை கடன்பட்டவர்களின் நுகர்வு குறைவது ஈடுகட்டுவதால், நிகர விளைவு இல்லாமல் போகும். அதாவது சமுதாயத்தின் சராசரி நுகர்வு விருப்பம் மாறாமலிருக்கும்.

பிகு எத்தனை சதவிகித விலை வீழ்ச்சி சமுதாயத்தில் மொத்தச் செலவைக் கூட்டுமென்று கூறவில்லை. அரசு மிகவும் விலையைக்

சேமிப்பும் முந்திய முதலீடும் சமமாக இருக்குமென்று கருதினர். பண அங்காடி (Money Market): பணத்தேவையோடு தொடர்புடையது பண அங்காடியாகும். முதலிரண்டும் உண்மையான பொருளாதாரம் தொடர்பானது. அவர்கள் பணம், வாங்கல் - விற்றல், கொடுக்கல்- வாங்கல் ஆகிய பணிகளை மட்டும் செய்வதாகக் கருதியதால் அதற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கவில்லை. பண அங்காடி மற்றைய அங்காடியிலிருந்து விலகியிருப்பதாகவும் கருதினர்.

தொன்மைப் பொருளியலறிஞர்கள் விலைகளிலும் கூலிகளிலும் இருக்கும் நெகிழ்ச்சியின் காரணமாக முழுநிறை வேலை நிலை ஏற்படுமென்று நம்பினர். அதாவது, மிகை உற்பத்தி காரணமாக, மந்தநிலை உருவாகி வேலையின்மை தோன்றினால் விலைகள் குறையும். இதனால் தேவை கூடும். தேவை விலையைத்தூண்ட, பொருளாதார நடவடிக்கைகள் பெருக வேலையின்மை மறையும். இதைப் போல வேலையின்மையைக் கூலியைக் குறைப்பதன் மூலம் போக்கலாமென்று எண்ணினர். கூலியைக் குறைத்ததால் உழைப்பிற்குரிய தேவை கூட பொருளாதார நடவடிக்கைகள் அதிகமாகும். இதனால் வேலையின்மை மறையும்.

டி.ஆர். மால்தஸ், சிஸ்மாண்டி (Sismondi), கார்ல் மார்க்ஸ், ஹாப்சன், சில்வியோ கேசல் (Silvio - Gesell) போன்றவர்கள் தொன்மைப் பொருளியலறிஞர்கள் கருத்தைச் சில வேளைகளில் சாடிய போதிலும் அவர்களால் அதனை முழுவதும் மறுக்க இயலவில்லை. கீன்ஸ்தான் பழைய கருத்தை மறுத்ததோடு புதிய வேலைவாய்ப்புக் கோட்பாட்டையும் உருவாக்கியளித்தார்.

## II. சேயின் அங்காடி விதி
## (Say`s Law of Market)

தொன்மைப் பொருளியலறிஞர்களின் முழுநிறை வேலை வாய்ப்புக் கோட்பாடு சேயின் அங்காடி விதியையும், பண அளிப்புக் கோட்பாட்டையும் சார்ந்திருப்பதால் அவற்றை இங்கு விளக்கலாம்.

**அங்காடி விதி விளக்கம்**: பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிரெஞ்சுப் பொருளியலறிஞரான ஜே.பி.சே (Jean Baptist Say 1667 - 1832) "அளிப்பு அதனுடைய சொந்தத் தேவையை உருவாக்கும்" (Supply creates its own demand) என்று கூறிய

# 4. தொன்மைப் பொருளியலறிஞர்களின் வேலை வாய்ப்புக் கோட்பாடு

## I. தொன்மைப் பொருளியலறிஞர்களின் கருத்து விளக்கம்

'தொன்மைப் பொருளியலறிஞர்கள்' (Classical Economists) என்னும் சொற்றொடரை, ரிக்கார்டோவையும் ஆடம்ஸ்மித் உள்ளிட்ட அவரது முன்னோடிகளையும் குறிக்க கார்ல்மார்க்ஸ் பயன்படுத்தினார். ஆனால் கீன்ஸ் தொன்மைப் பொருளியலறிஞர்கள் என்ற சொற்றொடரை ஜேம்ஸ் ஸ்டுவார்ட் மில், ஆல்பிரட் மார்ஷல், ஏ.சி.பிகு உட்பட ரிக்கார்டோவை பின்பற்றிய பொருளியலறிஞர்களை எல்லாம் குறிக்கின்ற வகையில் பயன்படுத்தினார். பொதுவாக 1776ல் ஆடம்ஸ்மித்தின் 'நாடுகளின் செல்வம்' (Wealth of Nations) நூல் வெளி வந்ததிலிருந்து ஏறத்தாழ 50 ஆண்டுகளில் டேவிட் ரிக்கார்டோ, ஜே.எஸ்.மில், மார்ஷல், ஜீன்பேப்டிஸ்ட், சே ஆகியோர் உருவாக்கிய கோட்பாட்டை தொன்மைப் பொருளியல் கோட்பாடு என்கின்றோம்.

தொன்மைப் பொருளியலறிஞர்கள், உழைப்பும், மூல வளங்களும் எப்பொழுதும் முழுநிறை வேலை நிலையில் இருக்கு மென்று கருதினார். அவர்கள், **உற்பத்தி செய்த பொருட்கள் அவைகளே தேவையை உருவாக்கிக் கொள்வதால், மொத்த அளிப்பும் மொத்தத் தேவையும் சமமாக** இருக்குமென்று கருதியதால், முழுநிறை வேலை நிலை இருக்குமென்ற அவர்கள் கருத்துப்படி, குறுகிய காலத்தில் வேண்டுமானால் வேலையின்மை இருக்கலாம். தற்காலிகமாக இருக்கும் வேலையின்மை பிறழ்ச்சி காரணமாகவோ, தன் விருப்பமானதாகவோ இருக்கும்.

தொன்மைப் பொருளியலறிஞர்கள் நிறைவுப் போட்டி இருக்குமென்ற எடுகோளின் அடிப்படையில் கீழ்க்கண்ட மூன்று வகையான அங்காடிகள் இருக்குமென்று கருதினர்.

1. **உழைப்பு அங்காடிள்** (Labour Market): தொழிலாளர்கள் தேவை அளிப்பை ஒட்டி உழைப்பு அங்காடி இருக்கும்; அதன்படி நிலவும் கூலி விகிதத்தில் உழைப்பின் தேவையும் அளிப்பும் சமமாக இருக்கும். 2] **உற்பத்தி அங்காடி** (Product Market): சேமிப்பும் முதலீடும் உற்பத்தி அங்காடியில் சமமாக இருக்கும். அதாவது, முந்திய

இதன்படி பணம் மாற்று மையமாக மட்டுமே பணியாற்றுகின்றது. இதன்படி மொத்தத் தேவை மொத்த அளிப்புக்குச் சமமாக இருக்கும்.

**எடுகோள்கள்:** சே (Say) தன் விதியைக் கீழ்க்கண்ட எடுகோள்களின் அடிப்படையில் உருவாக்கியுள்ளார்.

1. உற்பத்தியாளர்கள் தங்களுக்குத் தாங்களே வேலை கொடுத்துக் கொள்ளும் சமுதாயமாக இருக்கும். அதாவது உற்பத்தியாளர்கள் தங்களுடைய பொருட்களை விற்றே வருவாய் பெறுவார்கள்.

2. தங்களுடைய வருவாய் முழுவதையும் நுகர் பொருட்களுக்கோ, உற்பத்தியாளர் பொருட்களுக்கோ செலவிட்டு விடுவார்கள்.

3. சுதந்திரமாக மாற்றுப் பொருளாதாரம் இருக்கும். வாங்குபவர்கள் விருப்பம்போல வாங்குவார்கள். விற்பவர்களும் சுதந்திரமாக விற்பனை செய்வார்கள். நிறைவுப்போட்டி நிலவும். உற்பத்தியிலோ, மாற்றிலோ கட்டுப்பாடு இருக்காது.

4. சேமிப்பும்,முதலீடும் வேறுபட்ட பணிகளாக இருக்காது. சேமிப்பும், முதலீடும் சமமாக இருக்கும். நெகிழ்ச்சியுள்ள வட்டி வீதம் சேமிப்பையும், முதலீட்டையும் சமநிலைக்குக் கொண்டு வரும்.

5. அரசு தலையிடாக் கொள்கையைப் பின்பற்றும். அங்காடிச் சக்திகள் செயல்படுவதில் தலையிடாது.

6. அங்காடிகளின் அளவு உற்பத்தியின் அளவுப்படியே அமையும். அப்பொழுதுதான் அளிப்பு தேவைக்குச் சமமாக இருக்கும்.

7. பண ஓட்டம் தொடர்ச்சியாக இருக்கும். சேமிப்பு என்பது மூலதனப் பொருட்களின் முதலீடாக இருக்கும். அதாவது பணத்தைப் பெட்டியில் பூட்டி வைப்பது இருக்காது.

8. அங்காடி விரிவடையக் கூடியதாக இருக்கும். மாற்றுக்கு பொருட்கள் அளிக்கப்படுவதை ஒட்டி அங்காடி விரிவடையும்.

9. விரிவடையும் பொருளாதாரத்தில் புதிய நிறுவனங்களும் தொழிலாளர்களும் மற்றவர்களின் உதவியின்றி தங்களது பொருட்களை அளிப்பதன் மூலமே உற்பத்தி முறையில் தங்களை நிலைப்படுத்திக் கொள்வார்கள்.

10. பொருளாதாரம் நீண்டகாலச் சமநிலையில் இருக்கும்.

**7. பணம் மாற்று மையமாக மட்டும்:** பணம் பண்டமாற்றிலுள்ள சிக்கலைத் தீர்ப்பதாக மாற்று மையமாக மட்டும் பயன்படுவதாக இருக்கும். அது பொருளாதாரத்தில் வேறு விளைவுகளை ஏற்படுத்தாது.

**திறனாய்வு:** ஜே.எஸ்.மில், ஆல்பிரட்மார்ஷல், ஏ.சி.பிகு போன்றவர்கள் சேயின் விதியைப் பெரிதும் ஆதரித்தனர். ஆனால் மாறிய சூழ்நிலையில் சேயின் விதி அப்படியே பொருந்தவில்லை. ஆதலால் அமெரிக்க, இங்கிலாந்துப் பொருளியலறிஞர்கள் குறை கூறத் தொடங்கினர். குறிப்பாக அமெரிக்காவின் ஜே.எம். கிளார்க் வன்மையாகச் சாடினார். கீன்ஸ் இதனைக் குறை கூறியதோடு நில்லாமல் புதிய வேலை வாய்ப்புக் கோட்பாட்டை உருவாக்கி சேயின் விதியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டார். சேயின்விதி பற்றிக் கூறப்பெறும் குறைகளைத் தொகுத்துக் கூறலாம்.

**1. அளிப்பு தேவையை உருவாக்காமை:** உற்பத்தி நோக்கில் அளிப்பு அதனுடைய தேவையை உருவாக்கும் என்பதை ஏற்க முடியாது. சேயின் விதி மக்கள் தங்களுடைய மொத்த வருவாயையும் செலவிடுவார்களென்ற எடுகோளின் மீது உருவாக்கப் பெற்றுள்ளது. ஆனால் மக்கள் எல்லா வருவாயையும் செலவிடாமல் ஒரு பகுதியைச் சேமிக்கின்றனர். வருவாய் ஓட்டத்தில் ஒரு பகுதியைச் சேமிப்பதால் மொத்தத் தேவையில் பற்றாக்குறை ஏற்பட்டு மிகை உற்பத்தி ஏற்படுகின்றது. ஆனால் தொன்மைப் பொருளியலறிஞர்கள் சேமிப்பை எல்லாம் முதலீடு செய்வார்களென்று எண்ணினர். திறனாய்வாளர்கள் வட்டியின் செல்வாக்கை ஒட்டியே முதலீடு அமைவதால் சேமிப்பெல்லாம் முதலீடாவதில்லை என்று சுட்டிக்காட்டுகின்றனர்.

**2. வேலையின்மை :** வேலைவாய்ப்பு நோக்கில் தற்காலிகமாக மட்டுமே வேலையின்மைச் சிக்கல் இருக்குமென்ற கருத்தை ஏற்க முடியாது. எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் வேலையின்மைச் சிக்கல் இருக்கின்றது. கூலியைக் குறைப்பதால், நெகிழ்ச்சியால் மட்டும் முழுநிறை வேலைவாய்ப்பு ஏற்படுவதில்லை. மாறாக கூலியைக் குறைப்பதால் வருவாய் குறைய, தேவைகுறைய, உற்பத்தி குறைய மேலும் வேலையின்மை கூடலாம்.

3. உலகப் பெருமந்தம் : 1930 இல் ஏற்பட்ட உலகப்பெருமந்தம் சேயின் விதியைப் பொய்யாக்கிவிட்டது. சேயின் விதிப்படி நீண்ட பெருமந்தம் ஏற்பட முடியாது. ஆனால் உலகப் பெருமந்தம் ஏன் வாணிப ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்ற தென்பதை எண்ணிப்பார்க்க வேண்டிய தேவையை உருவாக்கியது

**4. பணத்தின் பணி :** சே, பணம் மாற்று மையமாக மட்டும்தான் செயல்படுகின்றதென்று கருதினர். அதனுடைய பிற பணிகளை, குறிப்பாக சேமிப்புக் களஞ்சியப் பணியை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவில்லை. இது இந்த விதியின் குறிப்பிடத்தக்க குறையாகும்.

**5. நுகர்வும் வருவாயும் :** தொன்மைப் பொருளிய லறிஞர்கள் வருவாய் கூடுமளவிற்கு நுகர்வும் கூடுமென்று கருதினர். கீன்ஸ் இக்கருத்தைச் சாடினார். கீன்ஸ் வருவாய் கூடுகின்ற அதே விகிதத்தில் நுகர்வு கூடாதென்பதைச் சுட்டிக்காட்டினார். ஏனென்றால் உயர் வருவாய் நிலையில் சேமிப்புக் கூடும். இதனால் விளைவுள்ள தேவையில் பற்றாக்குறையும், மந்தமும் தோன்றுகின்றன.

**6. வட்டி வீதம்:** வட்டிவீத மாறுதலால் மட்டும் சேமிப்பும் முதலீடும் சமநிலைக்கு வருவதில்லை. சேமிப்பவர்கள் நோக்கம் வேறாகவும், முதலீட்டாளர்கள் நோக்கம் வேறாகவும் உள்ளது. கீன்ஸ் வருவாய் மூலமே சேமிப்பும் முதலீடும் சமநிலையடையுமென்று கருதுகின்றார்.

**7. அரசின் தலையீடு:** சே கருதியதைப்போல் பொருளாதாரம் தன்னைத்தானே சரிசெய்து கொள்வதாக இல்லை. இதனால் அரசு தலையிடுவது தேவையாகின்றது. கூலிகளும் விலைகளும் நெகிழ்ச்சியுடையனவாக இல்லை. இதனால் அது தலையிட்டே முழுநிறை வேலை நிலையை ஏற்படுத்த வேண்டியுள்ளது.

**8. நிறைவுப்போட்டியின்மை :** சேயின் அங்காடி விதி நிறைவுப் போட்டி நிலவுகின்றதென்ற எடுகோளில் உருவானது. ஆனால் நடைமுறையில் எங்கும் நிறைவுப்போட்டி இருப்பதில்லை.

**9. வேலை நிலையை விளக்காமை:** தொன்மைக் கோட்பாடு, முழுநிறை வேலை நிலை இருக்குமென்ற எடுகோளின் மூலம் எப்படி வேலை வாய்ப்பு நிலை நிர்ணயிக்கப்படுமென்பதை விளக்கத் தவறிவிட்டது.

## III. பிகுவின் முழுநிறை வேலை நிலைக்கருத்து

கேம்பிரிட்ஜின் புகழ்பெற்ற பொருளியலறிஞரான ஏ.சி. பிகு (Arthur Cecil Pigou) சேயின் அங்காடி விதியை மேம்படுத்தி வழங்கிய முழுநிறை வேலை நிலை பற்றிய கருத்து குறிப்பிடத்தக்கது. இதனை 'பிகுவின் விளைவு' (Pigou Effect)

**அங்காடி விதியின் உள்ளடக்கக் கருத்துக்கள்:** சேயின் அங்காடி விதியில் கீழ்க்கண்ட கருத்துக்கள் உள்ளடங்கியுள்ளன

1. **தானே இயங்கும் பொருளாதாரம்**: சேயின் அங்காடி விதி, பொருளாதார அமைப்பு எந்தக் கட்டுப்படுத்தும் அதிகார சக்தியுமின்றி தானே செயல்படுவதாகவும், தனக்குத்தானே ஏற்றத்தாழ்வைச் சரிப்படுத்திக் கொள்வதாகவும் இருக்குமென்று கூறுகின்றது. எடுத்துக்காட்டாக, வேலையின்மை இருந்தாலும் கூலிகள் குறைவதன் மூலம் அனைவருக்கும் வேலை கிடைக்கும் நிலை ஏற்படுமென்ற கருத்தைக் கூறலாம்

2. **அரசு தலையிடாமை**: சேயின் விதிப்படி அரசு பொருளாதார நடவடிக்கைகளில் தலையிடாத கொள்கையை பின்பற்ற வேண்டும். அரசு தலையிட்டால் தானே இயங்கும் பொருளாதாரத்தின் சமநிலை சீர்குலையும். அரசு தலையிடா நிலையில் ஏற்படுகின்ற ஏற்றத்தாழ்வுகள் அங்காடி சக்திகள் செயல்படுவதால் நீங்கிவிடும். விலை, கூலி, வட்டி ஆகியவற்றில் நெகிழ்ச்சித் தன்மை இருக்க வேண்டும். தொழிலாளர் சங்கங்களும் தலையிடக் கூடாது.

3. **மிகை உற்பத்தியின்மை**: இவ்விதிப்படி பொருளாதாரத்தில் மிகை உற்பத்தி (Over-Production) இருக்காது. உற்பத்தி மிகுதியாகின்ற பொழுது விலைகள் குறைய, தேவை கூட மிகை உற்பத்தி தீர்ந்து விடும். தனித்தொழிலில் தற்காலிகமாக மிகை உற்பத்தி இருந்தாலும், நீண்டகாலத்தில் இருக்காது. பொது மிகை உற்பத்தி ஏற்பட வழியில்லை.

4. **பொது வேலையின்மை இல்லை**: சுதந்திரமான போட்டிப் பொருளாதாரத்தில் பொது வேலையின்மை தோன்றாது. கூலி குறைகின்ற பொழுது உழைப்புக்குத் தேவை கூடும் வேலையின்மை குறையும்.

5. தானே வருவாய் அளித்தல்: வேலையற்றவர்களையும் பயன்படுத்தாத சாதனங்களையும் உற்பத்தியில் ஈடுபடுத்த ஆதாயமாக இருக்கும். ஏனென்றால், அவை தங்களுக்கு தாங்களே வருவாய் அளித்துக் கொள்ளும்.

6. வட்டியின் நெகிழ்ச்சி: வட்டி நெகிழ்வுடையதாக இருப்பதால் சேமிப்பும் முதலீடும் சமமாக இருக்கும்.

அங்காடி விதி ஒரு காலத்தில் மிகப்புகழ் பெற்றிருந்தது. இக்கருத்துப்படி உற்பத்தியே பொருளுக்கு அங்காடியை உருவாக்கிவிடும்.

சேயின் அங்காடி விதிப்படி, சுதந்திரப் பொருளாதாரத்தில் உற்பத்திக் காரணிகளின் மொத்த வருவாய் பொருட்களுக்கும் பணிகளுக்கும் தேவையை ஏற்படுத்தும். அதாவது பொது அளிப்பும் பொதுத் தேவையும் சமமாக இருக்கும். இதனைக் கீழ்க்கண்டவாறு விளக்கலாம்.

| | | |
|---|---|---|
| பொருட்களின் உற்பத்தி ஒருகோடி ரூபாய் | = | கூலி, வட்டி, வாரம் ஆதாயமாக வருவாய் ஒரு கோடி ரூபாய் |
| பொருட்களின் அளிப்பு ஒருகோடி ரூபாய் | = | பொருட்களுக்கான தேவை ஒரு கோடி ரூபாய் |

ஒரு கோடி ரூபாய் பொருள் உற்பத்தியாகின்றபொழுது இரண்டு விளைவுகள் ஏற்படுகின்றன. ஒரு பக்கம் ஒரு கோடி ரூபாய் உற்பத்திக்காரணிகளுக்கு வருவாயாகச் சென்று, ஒரு கோடி ரூபாய் பொருட்களுக்கான தேவையாக உருவெடுக்கின்றது. மறுபக்கம் ஒரு கோடி ரூபாய் பொருட்கள் (அளிப்பு) அங்காடிக்கு வருகின்றன. அளிப்பும், தேவையும் சமமாகின்றன. அளிப்புக் கூடுகின்றபொழுது உற்பத்திக் காரணிகளின் வருவாயும் கூடும். உற்பத்திக் காரணிகளின் வருவாய் கூடுகின்ற அளவிற்குப் பொருட்களின், பணிகளின் தேவையும் கூடுகின்றன. இதனை O = Y= E ( O கூடுகின்ற உற்பத்தி; Y கூடுகின்ற வருவாய்; E கூடுகின்ற செலவு) என்றும் கூறலாம்.

அளிப்புத் தனக்குத்தானே தேவையை உருவாக்கிக் கொள்ளுமென்று கருதியதால் நீண்டகாலப் பொருளாதார மந்தமோ, வேலையின்மையோ தோன்றாதென்று எண்ணினர். தற்காலிகமாக ஏதாவது ஒரு பொருளின் உற்பத்தி மிகுதியாகலாம். மற்றொன்றின் உற்பத்தி உற்பத்தி குறையலாம். ஆனால் அது விரைவிலேயே மாறி முழுநிறை வேலை வாய்ப்பு நிலையை அடையும்.

பண அளவுக் கோட்பாட்டின்படி விலைமட்டம் என்பது பண அளிப்பின் பணியாக இருக்கும். பண அளவின் மாற்ற விகிதத்தில் விலைமாறும். இதனை MV=PT என்ற சமன்பாடு காட்டுகின்றது.